**O.S. No. 19 /2021**

**Date:20.02 .2026**

**வா.சா. 4 செண்பம் என்ற செண்பகராஜ்**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் தாக்கல் செய்துள்ள நிரூபண உறுதி கூற்றை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். வாதிதரப்பில் என்னை அழைத்ததன் பேரில் தான் நான் சாட்சியம் அளிக்க வந்தேன் என்றால் சரிதான். பொன்னுச்சாமி தேவர் 04.05.2018 ம் தேதியில் பாலசுப்பிரமணியன் என்பவருக்கு ரூ.3,00,000/- கொடுத்தார். பணம் கொடுக்கும் போது நான் தான் பிராமிசரி நோட்டினை எழுதினேன். நான் கடனுறுதி சீட்டினை எழுதியதாக வழக்கில் சொல்லப்படவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பொன்னுச்சாமி தேவர் பாலசுப்பிரமணியனுக்கு பணம் கொடுத்ததை நான் நேரடியாக பார்த்தேன். அதில் ரூ.3,00,000/- பணம் இருந்ததது என்ற விவரம் எப்படி தெரியும் என்றால் பாலசுப்பிரமணியன் பணம் குறைவாக இருப்பதாக சொல்லவில்லை அதனால் தெரியும். நான் மேற்படி பணத்தை எண்ணி பார்க்கவில்லை. பாலசுப்பிரமணியத்திடம் பணம் கொடுத்தப்பின்னர் பிராமிசரி நோட்டில் ரூ.3,00,000/- கொடுத்ததாக எழுதினேன். புரோநோட்டில் பூர்த்தி செய்யப்பட்ட வாசகங்களின் கையெழுத்தும், என்னுடைய கையெழுத்தும் வேறுபாடாக உள்ளது என்றால் சரிதான். என்னுடைய ஊர் வாதி மற்றும் பிரதிவாதிகளின் ஊருக்கு பக்கத்து ஊர் ஆகும். பொன்னுச்சாமி தேவர் மகன் வேலுச்சாமி என்பவரும், பிரதிவாதி ஒரே நேரத்தில் தேர்தலில் நின்று தோற்று போனவர்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் சொன்னது போல பிராமிசரி நோட்டை எழுதவில்லை என்றாலும், நான் இந்த வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/-P.Mahindra Varma
Subordinate Judge,
Sankarankovil.